முருகப்பெருமான் துணை

**மகான் புண்ணாக்கீசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.10.2021, வியாழக்கிழமை

1. சதாசிவ சூட்சும பலம் ஆன
சற்குருவே ஞான தேசிகனே
பூதலத்தை ஞான வழிநடத்த
பூரண பலம் வரமாகப் பெற்ற அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் துல்லிய ஆசிதனை
வரங்களென பிலவ தரிவை திங்கள்
வல்லமைபட எழுநான்கு திகதி குரு வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள், 14.10.2021 வியாழக்கிழமை)
3. வாரமதில் புண்ணாக்கீசர் யானும்
வழங்குவேன் உலக நலம் பெற
வாராந்திர ஞானியர் பூசைவழி
வல்லமை உலகினில் கூடிவர
4. வருகவே உலகம் எங்கிலும்
வடிவேலன் ஆசி பெற்றவர்களாக
ஆறுமுக அரங்கன் தொண்டர்கள்
அளவிலா சக்திகளாகப் பரவி
5. பரவியே மக்களிடை நற்குணம்
பரிபக்குவமுடன் உயர் பண்புகளும்
பரவியே ஞானவழிக்கு உண்டான
பாடிடுவேன் தகுதிகள் நிரம்பியே
6. நிரம்பியே உலக மக்களெல்லாம்
நிலைத்தன்மை கொண்டவர்களாகி
அருந்தவசி அரங்கன் வழிகாட்டலால்
அனைவரும் ஞானிகள் ஆவர்
7. அவனியில் அரங்கன் ஆசியால்
அறமெனும் அன்னதான சேவை
புவனம் எங்கிலும் பரவி வருக
புண்ணியபலம் யாவர்க்கும் கிட்டி
8. கிட்டியே கலிகால நிலைகள்
கொடுமைகள் கொடூரச் செயல்கள்
கட்டம் தரும் யாவும் விலகி
கலிகாலம் பாதுகாப்பான காலமாக

9. ஆகவே மாறி இனிதே
அமைந்திடும் ஞான ஆட்சிகாலமாக
செகமெங்கிலும் பெரும் மாற்றம்
செப்பிடுவேன் அரங்கன் சீடர்களால்

10. சீடர்களால் நடந்தேறக் கூடும்
சித்தி தரும் அரங்க ஞானியே
இடரை பேரிடர்களை வெல்லும்
இணையில்லா அவதார ஞானி ஆகும்

11. ஆகவே கலிவாழ் மக்கள்
ஆறுமுக அரங்க ஞானிவழி
மிகைபட இணைந்து வர மாற்றம்
முருகப்பெருமான் ஞான ஆட்சியாக காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–